**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை:–திரு. நா. சிவபழனி, BA., BL.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7–ம் நாள் சனிக்கிழமை
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23 ஆம் நாள்

<u>அசல் வழக்கு எண்.40/2025</u>

1. ராஜேஸ்வரி
2. சொர்ணவள்ளி .... வாதிகள்

//எதிராக//

1. சந்திரராசன்
2. சூரியமூர்த்தி
3. திருஞானமூர்த்தி
4. சார்பதிவாளர், கந்தர்வக்கோட்டை
5. மாவட்ட பதிவாளர், புதுக்கோட்டை
6. மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இன்று 07.03.2026 என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.குலாம் தஸ்தாகீர்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.R.M.ரெங்கசாமி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K. செந்தில்குமார், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில், இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்துவிட்டதாகவும், எனவே, இவ்வழக்கினை மேல்நடத்தவில்லை என்றும் வாதி தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து, பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

வழக்கு சொத்து வாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமே உரிமையுடையது என்று உரிமை விளம்பல் கோரியும், வழக்கு சொத்தில் வாதிகளின் குடும்பத்தாரின் அமைதியான அனுபவத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளோ அல்லது அவர் வகை ஆட்களோ எந்த வகையிலும் தடை செய்யக்கூடாதென நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தை

1ஆம் பிரதிவாதிக்கு வாதிகளின் தகப்பனார் கோவிந்தபிள்ளை என்பவர் கடந்த 26.12.1990 ஆம் வருடம் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவண எண் 1311/1990 ஆரம்பம் முதலே இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கு சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமனம் செய்து ஏற்படுத்தியுள்ள தார்சுவீடு, கட்டுமானங்களை அகற்றிக்கொள்ள 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டது என்றும் இவ்வழக்கினை மேல்நடத்தவில்லை என்றும் வாதிகள் தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து, அந்த குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டது என தள்ளுபடி செய்யப்படுகிறது.

இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 7–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 13:52:18 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**